உ

திருப்போரூர் கந்தர்

மயில் விருத்தம்.

சென்னை:

B. இரத்தின நாயகர் அண்டு சன்ஸ்

அவர்களாற்றமது

திருமகள் விலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1923.

சிவமயம்.

மயில்விருத்தம்.

காப்பு.

கட்டளைக்கலித்துறை.

காரூர்மலர்பூஞ்சோலை வாசங்கத்திக்குமொழிற்
போரூர்மருவுமனு முருகேசன்-பொருவிலம்பன்
வாரூர்குறவல்லி மாரன்மயூரவளம்புகல
நீரூர்முகிற்கரி * யானனத்தானை நினைநெஞ்சமே.

* ஆனனம் முகம்.

அறுசீர் இரட்டையாசிரிய விருத்தம்.

அண்டரண்டங்களுடனீரேழுபுவனங்களதிர நடமாடுமயிலே, அரகராவென்று மாற்பிரமன்முதன் முனிவர்களர்ச்சிக்கவந்தமயிலே, தண்டையொடு கிண்கிணிசிலம்பொலி முழங்கவே தாண்டவம் புரியுமயிலே, தர்க்கமிடுசூரனுடனெக்குநீராகவே சாரிவருதோகைமயிலே, கண்டதொருபேய்ப்பூத பிர்ம

மராட்சதர்களுடல்கதரிட மிதிக்குமயிலே, கரடிபுலி யாளி * யரிமிருகங்களியாவையுங் காலாக்கினைகொண்டமயிலே, தெண்டனிட்டேபணியு மடியவர்களீடேற சேவைதந்தாளுமயிலே, திருப்போரி யூரில்வளர் கந்தப்பரேறிவரு சித்திரக்கலாபமயிலே. 1

* அரி சிங்கம்.

அஞ்சியப்பசந்தோர்க டாய்தந்தையாகவுங் தாகரிக்கின்கிறமயிசல யாருமற்றோர்கடஞ் சுற்றமேநானென்றடுத்தாண் டளிக்குமயிலே வஞ்சகப்பில்லிசூனிய மேவல்செய்வோர்கண் மார்பைப்பிளக்குமயிலே,மட்டுச்கடங்காத துஷ்டப்பசாசுகளை ம்மாரணஞ்செய்யுமயிலே நஞ்சான்விடமமுத சஞ்சீவியாகவே நடனமிடு தோகைமயிலே ராஜபரமேஸ்வரி தருங்குமரனைக்கொண்டு நாட்டியம்புரியுமயிலே செஞ்சொற்றமிழ்க்கும்பமுனி மகிழ்ந்தோதவே திவ்யநடமாடுமயிவே திருப்போரியூயில்வளர் கந்தப்பரேறிவரு சித்திரக்கலாபமயிலே. 2

அட்டதிக்கெங்கு மொருநொடியில் வலமாய்வந்த வற்புதக்கலாபமயிலே ஆயிரத்தெண்பணு முடி

யுரகனுடல்குழைய வாக்கிரமித்தாடுமயிலே கட்டழகர் நவவீரர் வீரபத்திரன் பத்திரகாளியும் வணங்குமயிலே கனமானவைரவன் சரணெனப்போற்றவே கலகலென்றுடுமயிலே துஷ்டரைச் சயங்கொண்டு சிஷ்டபரிபாலனந் தோலரதியற்றுமயிலே துதிசெயட்யேனுக் கோரிக்கைநிறைவுறத் தொந்தேமென்றுடுமயிலே சிட்டர்புகழ் குறவள்ளி மகிழ்தெய்வயிவர் சித்தங்களிக்குமயிலே திருப்போரியூரில்வளர் கந்தப்பரேறிவரு சித்திரக்கலாபமயிலே. 3

நந்திமத்தளமதைத் தொந்தோமெனக்கொட்ட நாட்டியஞ்செயயுமயிலே நாரதமகாமுனிவன் வீணைவாத்தியஞ்செய்ய நன்காய்நடிக்குமயிலே சுந்தரசம்பந்தரப்பர்மாணிக்கரொடு துறவோரிறைஞ்சுமயிலே சொற்பெரியதில்லைமூவாயிரவ ரனுதினந்தோத்திரஞ்செய்யுமயிலே கந்தமிகுநவரத்தினமாலையும் பொன்னடக்கம்பனிந்தாடுமயிலே கதிர்மதிகளிருபுரந் தீபங்களெனவொளிக் காலநின்றுடுமயிலே சிந்தையிற்றுயர்நீக்கி யென்றென்னையாண்டச் செஞ்சிலக்கலாபயிலை திருப்போரியூரில்வளர் கந்தப்பரேறிவரு சித்திரக்கலாபமயிலே. 4

வாடித்தவிக்கின்ற வேழையடியேனுன்மனத்துய ரகற்றுமயிலே வையாபுரிக் குமரரேறியே விளையாடு மரக மயூரமயிலே பாடிப்படிக்கின்ற பாவணர் நாவேடு பரதநடமாடுமயிலே பட்சமாயன்பருக் கதிகசம்பத்தெலாம் பரிவாயளிக்குமயிலே கோடிசூரிய ப்பிரகாசத் தெய்வயானை பூந்துறவல்லி மகிழுமயிலே குன்றைத்துளைத்துமோர் நற்கீரரைக்காத்த குங்குமப்படீரமயிலே தேடிததினந்தேவர் பரவமெய்ஞ்ஞானச் செழுங்கருணை பொழியுமயிலே திருப்போரியூரில்வளர் கந்தப்பரேறிவரு சித்திரக்கலாபமயிலே. 5

. மாகொண்டுதாங்கியே யென்றனை வளர்க்கின்ற மாதாவுமானமயிலே மகமேநகிரியதனிலிரைதேர்க்துவளையாடி வட்டமிட்டாடுமயிலே பேர்கொண்டு சூரனுடலிருதுண்டமாகப் பிளந்திடநிமிர்ந்தமயிலே பெருகுவடகைலைநிகர் பழனிமலைவேலரைப் பிலனுடனேந்துமயிலே கார்கொண்ட * முகிறனைக் கண்டின்பமாகவே கல்லெனஈடிக்குமயிலே கண்டிகதிர்காமத்திலங்க முருகேசரை கனமாயெடுக்குமயிலே சீர்கொண்டுவளரட்ட லட்சுமிகடாட்சமிச் சிறியோ

* முகில்-மேக.

ர்களிக்குமயிலே திருப்போரியூரில்வளர் கந்தப்பரே றிவரு சித்திரக்கலாபமயிலே. 6

* அக்கரவுகுற்றியே யுக்கிரதாண்டவமாடி யாக ராவெஅறமயிலே அரனைவலமவந்துதான் சரணரவி ந்தமதை யகமகிழ்ந்தேத்துமயிலே குக்குடத்தவச கரதலவிசெய 0 வேளை மேற்கொண்டு விளையாடுமயி லே குருநாதர்தம்மைச் சுமந்துதினைப்புனங் குலவி மிகவந்தமயிலே மக்கண் மனையாடந்தை தாய்சுற்ற மென்றெனை மகிழ்நதளித்தருளுமயிலே வைபகந்த னிலானை சேனைமுதல்வாழ்வெலா மாற்றுமனுதவும் யிலே திக்குஅனையஅறிவேறில்லை யென்போர்க்குத விசெய்தாதரிக்குமயிலே திருப்போரியூரில்வளர் கந் தப்பரேறிவரு சித்திரக்கலாபமயிலே. 7

* அக்கரவு-சர்ப்பம்.

0 வேள்-முருகன்.

கரிமுகனுக்கிளைய துரைமுருகர் கண்டைராங்கா லுக்கிசைந்தமயிலே கைக்கணிக்காக உலகொருநொ டியில் வலம்வந்த காம்பீயநீலமயிலே கரியைகிரிபா யோகஞானமார்க்கத்தின் சதுர்ப்பத விதந்தமயிலே

* சாலோக † சாமீகம் ¶ சாரூப ‡ சாயுச்சிய சம்
பத்களிகருமயிலே துரிதமாமச் சமணரைவதைத் து
க்கிரமாகவே தொங்கோமென ருடுமயிலே தோகை
குறமாஅறணைத் தேடித்தினைப்புனஞ்சுற்றித் திரிந்த
மயிலே திருமருவுகல்வியுமொழுக்கமும் அடக்கமு
ஞ் செல்வமுமளிக்குமயிலே திருப்போரியூயில்வளர்
கந்தப்பரேறிவரு சித்திரக்கலபமயிலே. 8

* சாலோகம்-கடவுளுலகத்தில்வாழுதல்.
† சாமீபம்-கடவுள்சமீபத்தில்வாழுதல்.
¶ சாரூபம்-கடவுளிருப்பிடத்தில்வாழுதல்.
‡ சாயுச்சியம்-கடவுளோடுகலந்துவாழுதல்.

கெங்காபகிரதச் சேயேறமலேதோருங் கேளிக்
கையாடுமயிலே கின்னரர்கள்கிம்புருடர் கவர்காந்
தருவர்தொழுகிண்கிணித்தாள் கொண்டமயிலே வ
ங்காரவடிவேலர் தெய்வானைவள்ளிக்குவாகனமுமா
ன மயிலே வந்தடிபணிந்தோர்க்கு சந்தானசௌபாக்
கிய வாழ்வளித்தாடுமயிலே மங்காகபெரியோர்கள்
குலமெலாம் விர்த்திக்க வட்டமிட்டாடுமயிலே மா
ருப் பிணிக்கொன்று மணிமருந்தாகவே வந்துதவு

தோகைமயிலே சிங்காரமங்கை ✻ யரிதங்கை யுமையானீஅற செல்வனைத்தாங்குமயிலே தருப்போரியூரில்வளர் கந்தப்பரேறிவரு சித்திரக்கலாபமயிலே.

✻ அரி-விஷ்ணு.

பத்தியாகினது பாமாலையைப்பார்குனோர் பங்கினின்றுடுமயிலே பரியுரையளித்தவேண் முருகரைத்தாங்கிப் பாந்தாடுகின்றமயிலே சுத்தமுக்காலங் அதிக்குமாளிடங்நடந்துன்பந்தவிர்க்கு மயிலே துய்யசெஞ் சேவகபதாகரைப் போற்றியே சுகமுநறிக்குமயிலே தொத்தியேவழ நெடியகொக்கினைச் சட்டியிற் சுட்டெறித்திடவுமயிலே சுரருலகுளோர் புனிதமலர்மாரிபொழியத் துதைந்துவிளையாடுமயிலே சித்தமகிழ்வாயென்னை இரட்சிக்கவந்துற்ற சின்னயானந்த மயிலே திருப்போரியூரில்வளர் கந்தப்பரேறிவரு சித்திரக்கலபாமயிலே. 10

மயில்விருத்தம் முற்றிற்று.

———